**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**STC No.30-2024**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | Priyanka | Prosecution | pw1 Lw1chief |
| Father Name | Moorthy | Defence | |
| Village | Maanthoppu st, Pudhuthurai | Taluk | Sirkali |
| Calling | | Religion | |
| Age | 27 /2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 07**.05.2024** சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட விலாசத்தில் என் பெற்றோருடன் வசித்து வருகிறேன். நான் இவ்வழக்கின் புகார்தாரர் ஆவேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது பெரியப்பா மகன் அண்ணன் முறை ஆவார். கடந்த 17.11.2022 ம் தேதி காலை 9.00 மணியளவில் நானும் என் அம்மா மற்றும் அப்பா ஆகியோர் போர்டிகோவில் அமர்ந்து எங்களுக்கும் எதிர் வீட்டுக்கும் இடையே நடந்த தகராறு சம்மந்தமாக பேசிக் கொண்டிருந்தபோது பக்கத்து வீட்டில் இருக்கும் எதிரி லெனின் தாஸ் எங்கள் வீட்டு போர்டிகோவிற்கு வந்து எங்களை குறித்து ஏன் பேசுகிறீர்கள் என்று கேட்டார். அதற்கு என் அப்பா நாங்கள் உங்களை குறிதது பேசவில்லை என்று கூறினார். அப்போது ஆஜர் எதிரி லெனின்தாஸ் செங்கல்லை எடுத்து எனது அப்பாவின் வயிற்றில் அடித்தார். பேசிக்கொண்டிருக்கும்போதே எதற்கு அடிக்கிறீர்கள் என்று என் அம்மா எதிரி லெனின்தாஸ்டம் கேட்டபோது எதிரி லெனின்தாஸ் என் அம்மாவை அடிக்க வந்தபோது நான் தடுத்தேன். ஆஜர் எதிரி லெனின்தாஸ் என்னை கன்னத்தில் அறைந்து விட்டார். நான் நிலை தடுமாறி கீழே விழுந்து விட்டேன். எதிரி சுசீலா கையில் வைத்திருந்த கல்லை வைத்து என் அம்மாவை தாக்கினார். எதிரி லெனின் தாஸ் அவையில் கூறமுடியாத தகாத வார்த்தைகளால் என்னை அசிங்கமாக திட்டினார். பக்கத்தில் இருந்த கழியால் ஆஜர் எதிரி லெனின்தாஸ் என்னை தலையிலும் முதுகிலும் தாக்கினார். இந்த சம்பவத்தினை நான் போலிசில் புகார் கூறுவேன் என்று நான் கூறியதற்கு எதிரி லெனின்தாஸ் மனைவி

சரண்யா, பிரியங்கா, வெளியில் வாடி என்று கூறினார். நான் வாசலில் நின்று கொண்டிருந்தபோது சரண்யா என் தலை முடியை பிடித்து இழுத்து கையால் அடித்தார். சுசீலா என்னை செருப்பால் தலையில் அடித்தார். நான் அழுது கொண்டிருந்தேன். என் அம்மா என்னை வீட்டிற்குள் அழைத்து சென்றார். நான் என் அண்ணன் ஜானகி ராமனுக்கு போன் மூலம் தகவல் சொன்னேன். அவர் ஒரு ஆட்டோவை அனுப்பி வைத்தார். நானும் என் அம்மாவும் ஆட்டோவில் ஏறி சீர்காழி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றோம். நான் 5 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். என் அம்மாவும் சிகிச்சை எடுத்து கொண்டார். நான் சிகிச்சையில் இருந்தபோது திருவெண்காடு போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1 வது எதிரி ஆஜர் .**

**எதிரியும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியும் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது. மறுவிசாரணை இல்லை.**

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**<u>STC No.30-2024</u>**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | Tamilselvi | Prosecution | pw2 Lw2chief |
| Husband Name | Moorthy | Defence | |
| Village | Maanthoppu st, Pudhuthurai | Taluk | Sirkali |
| Calling | | Religion | |
| Age | 60 /2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 07**.05.2024** சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து சத்துணவு அமைப்பாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றதால் தற்போது வீட்டுக்குடிததனம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரி லெனின் தாஸை எனக்கு தெரியும். அவர் எனது கணவரின் அண்ணன் மகன் ஆவார். எதிரி சுசீலா எனது கணவரின் அண்ணன் மனைவி. எதிரி சரண்யா என் கணவரின் அண்ணன் மருமகள். கடந்த 17.11.2022 ம் தேதி காலை 9.00 மணியளவில் எங்களுக்கும் எதிர் வீட்டில் வசிப்பவருக்கும் இடையே நடந்த தகராறு பற்றி எங்கள் வீட்டு வாசலில் நான் என் கணவர் மற்றும் என் மகள் பிரியங்கா ஆகியோர் அமர்ந்து கொண்டு பேசிக்கொண்டிருந்தபோது என்னை பற்றி எவ்வாறு பேசிக்கொண்டீர்கள் என்று எதிரி லெனின் தாஸ் எங்களிடம் கேட்டார். செங்கல்லால் எதிரி லெனின்தாஸ் என்னையும் என் கணவரையும் தாக்கினார். எனது மகள் பிரியங்காவை எதிரி லெனின்தாஸ் கன்னத்தில் அறைந்தார். எதிரி லெனின்தாஸின் அம்மா சுசீலா எனது மகள் பிரியங்காவை செருப்பால் தலையில் அடித்தார். எதிரி லெனின் தாஸின் மனைவி பிரியங்காவை தலைமுடியை பிடித்து இழுத்து அடித்தார். எனது மகன் ஜானகிராமனுக்கு போன் மூலம் தகவல் சொல்லி அவர் அனுப்பிய ஆட்டோவில் சீரகாழி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக நானும் எனது மகளும் சென்றோம். அங்கு நானும் என் மகளும் 10 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்து கொண்டோம். மருத்துவமனையில் இருந்த போலிசார் எங்களை விசாரித்தார்கள்.

1வது எதிரி ஆஜர் .

எதிரியும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியும் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.

மறுவிசாரணை இல்லை.

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**STC No.30-2024**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | Moorthy | Prosecution | pw3 Lw3chief |
| Father Name | Rasangam | Defence | |
| Village | Maanthoppu st, Pudhuthurai | Taluk | Sirkali |
| Calling | | Religion | |
| Age | 45/2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 07**.05.2024** சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து தினக்கூலியாக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி லெனின் தாஸை எனக்கு தெரியும். ஆஜர் எதிரி எனது அண்ணன் மகன் ஆவார். அ.சா.1 எனது மகள். அ.சா.2 என் மனைவி. எதிரி சுசீலா எனது அண்ணன் மனைவி. எதிரி சரண்யா என் அண்ணன் மருமகள். கடந்த 17.11.2022 ம் தேதி காலை 9.00 மணியளவில் எங்களுக்கும் எதிர் வீட்டில் வசிப்பவருக்கும் இடையே இடப்பிரச்சனை பற்றி பேசிக்கொண்டிருந்தபோது எதிரி லெனின்தாஸ் எப்படி எனது பெயரை நீ சொல்லலாம் என்று என்னிடம் கேட்டார். உன்னை பற்றி நான் பேசவில்லை என்று கூறினேன். உடனே என் அண்ணன் ராஜாராமன் அப்போது எங்கள் வீட்டிற்கு வந்திருந்தார். எதிரி லெனின்தாஸ் என்னை வயிற்றில் செங்கல்லால் அடித்தார். என் மனைவியையும் செங்கல்லால் அடித்தார். எனது மனைவியை அடித்தபோது என் மகள் தடுக்க வந்தபோது அவரை கன்னத்தில் எதிரி லெனின் தாஸ் அறைந்தார். எதிரி லெனின்தாஸின் அம்மா சுசீலா என் மகளை செருப்பால் அடித்தார். லெனின் தாஸ் மனைவி சரண்யா என் மகளை தலை முடியை பிடித்து இழுத்து அடித்தார். என் மகன் ஜானகி ராமன் எனது மகளையும் மனைவியையும் ஆட்டோவில் சீர்காழி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் சேர்த்தார். அங்கு என் மனைவியும் மகளும் 5 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்து கொண்டனர். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1 வது எதிரி ஆஜர் .**

**எதிரியும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியும் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை.**